**சாட்சிய வாக்குமூலம்**

# மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தென்காசி.

## OS. No. 117 /2024

| | | | |
|---|---|---|---|
| வா.சா | : 2 | நாள் | : 07.10.2025 |
| பெயர் | : சுப்பராயலு | ஜாதி | : |
| தந்தை பெயர்/ | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07th day of October 2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் தற்போது தென்காசி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இன்று அழைப்பாணையில் கண்ட ஆவணங்களை ஆஜர்படுத்தி சாட்சியமளிக்க காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர் அலுவலகத்திற்கு வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியமளிக்க காவல் ஆய்வாளர் என்னை அனுமதித்து வழங்கிய அனுமதி கடிதம் சாட்சி தரப்பு சான்று ஆவணம் 1 ஆகும். கடந்த 12.05.2022 ம் தேதி காவல் ஆய்வாளர் அலுவலகத்தில் மதுரை கே. புதூர் வேலு மகன் மாரிமுத்து என்பவர் புகார் கொடுத்த ஆவணங்களை ஆஜர்படுத்த அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி நபர் புகார் கொடுத்தது தொடர்பான ஆவணங்கள் எதுவும் எங்கள் அலுவலக கோப்பில் இல்லை. காவல் துணை கண்காணிப்பாளருக்கு 20.10.2022 ம் தேதி மதுரை கே.புதூர் வேலு மகன் மணிவண்ணன் என்பவர் கொடுத்த புகார் மனு மற்றும் அதன் விசாரணை கோப்புகளை ஆஜர்படுத்த அழைப்பாணை வரப்பெற்றிருந்தது. மேற்படி மனுதாரர் 21.08.2023 ம் தேதி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு மதுரை தெற்கு மண்டல காவல் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற புகார் மனு விசாரணைக்காக காவல்

கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வரப்பெற்று காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு C.No.64/Camp/ptn/iGP-SZ/2023-ன்படி விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் காவல் துணை கண்காணிப்பாளர் இருதரப்பினரையும் அழைத்து விசாரித்தபோது கடந்த 17.11.2023 அன்று இருதரப்பினரும் விசாரணைக்கு ஆஜராகியுள்ளார்கள். மேற்படி இருவரையும் விசாரித்து நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தி மேற்படி மனு முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி மணிவண்ணன் காவல் துறை துணை தலைவர் தெற்கு மண்டலத்திற்கு அனுப்பிய புகார் மனு சாட்சி தரப்பு சான்றாவணம் 2 ஆகும். மாரிமுத்து என்பவர் புகார்தாரருக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பியதாக கொடுத்த அறிவிப்பு நகல் சாட்சி தரப்பு சான்றாவணம் 3 ஆகும். புகார்தாரர் மணிவண்ணன் கொடுத்த வாக்குமூல நகல் சாட்சி தரப்பு சான்றாவணம் 4 ஆகும். மாரிமுத்து கொடுத்த வாக்குமூல நகல் சாட்சி தரப்பு சான்றாவணம் 5 ஆகும். துணை கண்காணிப்பாளர் தயாரித்த விசாரணை அறிக்கை நகல் சாட்சி தரப்பு சான்றாவணம் 6 ஆகும். முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு மணிவண்ணன் என்பவர் அனுப்பிய கடிதம் விசாரணைக்காக தென்காசி காவல் ஆய்வாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது அது காவல் ஆய்வாளர் அலுவலகத்தில் C.No.142/SDOP/CMcell/2022 ன்படி விசாரணைக்கு அனுப்பப்பட்டு அப்போதைய ஆய்வாளர் மேற்படி மனுவின் மீது இருதரப்பினரையும் விசாரணை செய்துள்ளார். அந்த விசாரணையின்போது மணிவண்ணன் மற்றும் மாரிமுத்து ஆஜராகி வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். முதலமைச்சர் தனிப்பிரிவில் மணிவண்ணன் கொடுத்த புகார் மனுவில் முதல் பக்கம் மட்டும் என்னிடம் காட்டப்படும் சான்றாவணம் வா.சா.ஆ.16 ஆகும். மணிவண்ணன் மற்றும் மாரிமுத்து 12.05.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகி வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள்.

**<u>பிரதிவாதி தரப்பில் கு.வி.</u>**

புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள பணப் பரிமாற்றம் காலவரம்பு கடந்த பணப் பரிமாற்றம் என்றால் சரிதான். 2014 ம் ஆண்டு பணப் பரிமாற்றம் ஏற்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் உரிமையியல் வழக்கு பிரச்சனைகளை விசாரிக்கக் கூடாது என்றால் சரிதான். ஆய்வாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணை இரண்டும் உரிமையியல்

பிரச்சனை தொடர்பானது என்பதாலும் காலவரம்பு கடந்த பணப் பரிமாற்றம் தொடர்பான விசாரணை என்பதாலும் அத்தகைய விசாரணையை நாங்கள் மேற்கொள்ள அதிகார வரம்பு இல்லை என்றும் நாங்கள் அதிகார வரம்பை மீறி விசாரணை மேற்கொண்டுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. வாதி கேட்டுக் கொண்டதன் பேரில் தவறான புகார் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அதற்கேற்ப தற்போது சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.07 18:16:42 +0530